13 & 14 மே 2023

Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: குடும்ப வாழ்வு

நிகழ்வின் நோக்கம்: அனைத்துலக குடும்பங்கள் தினம்

# உண்மையின் ஆவி

**“நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்”**
(யோவான் 14:15)

பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறான இன்று, தூய ஆவி தரும் வாக்குறுதிகளை நாம் நினைவுகூருகின்றோம். இயேசு தாம் கைது செய்யபட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். சீடர்கள் அவரை



உண்மையாக அன்பு செய்தால். அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பார்கள் என்று கூறுகின்றார். இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பது தான் அவரை அன்பு செய்வதற்கான சான்று என்பதை இந்தக் கூற்று உணர்த்துகிறது.

அப்படியென்றால் இயேசுவின் கட்டளைகளுக்கு நாம் எவ்வாறு கீழ்ப்படிவது? உண்மையின் ஆவியாம் தூய ஆவியானவர், இயேசுவின் போதனைகளைப் புரிந்துகொள்ளவும், கீழ்படியவும் நமக்கு உதவுகிறார்.

இயேசுவை நாம் அன்புசெய்யும்போது, இயல்பாகவே அவருடைய கட்டளைகளைப் பின்பற்றுவோம். தூய ஆவியானவரும் இதைச் செய்ய நமக்கு வலுவூட்டுவார்.

இந்த மாதம், நாம் குடும்ப வாழ்வை மையமாகக் கொண்டு தூய ஆவியானவர் எவ்வாறு நம் குடும்பங்களைப் பலப்படுத்துகிறார் என்று நாம் கண்ணோக்குவோம்.

**திருத்தந்தை பிரான்சிஸ் தம்முடைய “அன்பின் மகிழ்ச்சி” (அமோரிஸ் லெட்டிசியா) என்னும் சுற்றுமடலில் இவ்வாறு கூறுகிறார். “பெரும்பாலான குடும்பங்கள் தாங்கள் முழுமையானவர்கள் என்று நினைப்பதில்லை. பல முறை கீழே விழுந்தாலும், தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப அன்பில் வாழ்ந்து தொடர்ந்து முன்னேறிச் செல்லும் பல குடும்பங்களுக்காக நான் நன்றி கூறுகிறேன்”** (57)

ஆம், நம் குடும்பங்கள் அனைத்தும் நிறைவுள்ளது என்று சொல்வதற்கில்லை. ஆனால் நம்மோடு எப்போதும் இருக்குமாறு தூய ஆவியானவரை இயேசு நமக்கு வழங்கியுள்ளார். தூய ஆவியானவர் நம்மோடும், நமக்குள்ளும் எப்போதும் இருக்கிறார். குடும்பத்திற்குள் வலுவான மற்றும் ஆரோக்கியமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும், இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து முன்னேறிச்செல்லவும், நம்மை வழிநடத்தவும் தூய ஆவியானவரை நாம் தேடுவோம். மேலும் தூய ஆவியானவர், உயிர்த்த ஆண்டவரும் மீட்பருமான இயேசுவோடு நம் குடும்பங்களை அன்பினால் பலப்படுத்துவாராக.

அன்பு குடும்பங்களே!, இயேசுவை இன்னும் ஆழமாக அன்பு செய்யவும், அவருடைய கட்டளைகளின்படி வாழவும் ஒன்றாக இறைவேண்டல் செய்யவும் ஒவ்வொருநாளும் நாம் முயற்சி செய்வோம். தூயஆவியானவரின் வழிகாட்டுதலுக்காகவும், தூண்டுதலுக்காகவும் குடும்பமாக இறைவேண்டல் செய்யுங்கள். செபமாலை மாதமான இந்த மாதத்தில் செபமாலையை குடும்பமாக செபியுங்கள். குடும்ப இறைவேண்டலின் முடிவில், தூய ஆவியானவரின் அருட்பொழிவிற்காக செபியுங்கள். குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் முன் முழந்தாட்படியிட்டு, செபிப்பது தாழ்ச்சியின் அடையாளம். அனைவருக்கும் ஈஸ்டர் வாழ்த்துகள்

**“பெரும்பாலான குடும்பங்கள் தாங்கள் முழுமையானவர்கள் என்று நினைப்பதில்லை. பல முறை கீழே விழுந்தாலும், தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப அன்பில் வாழ்ந்து தொடர்ந்து முன்னேறிச் செல்லும் பல குடும்பங்களுக்காக நான் நன்றி கூறுகிறேன்”**

– Pope Francis
*(Amoris Laetitia #57)*



தயாரித்தவர்கள்:
கோலாலம்பூர் மாமறைமாவட்ட குடும்ப வாழ்வுப் பணிக்குழு

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்: apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 20/2023